DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**OS. No. 37 /2021**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | காயத்ரி |
| Father's / Husband's Name | : | உதயன் |
| Age | : | 37 |
| Religion | : | இந்து |
| Calling | : | - |
| Caste | : | பிராமணர் |
| Village | : | ஆற்காடு |
| Date | : | 11.07.2022 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. வழக்கு விசாரணையில் எனது சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை தான். அதைப் படித்துப்பார்த்துதான் கையெழுத்துப்போட்டேன். 03.02.2021 தேதியிட்ட பிரதிவாதி என் பெயருக்கு எழுதிக்கொடுத்த விக்கிரைய அக்ரிமெண்ட் **வா.சா.ஆ.1.** 03.06.2021 தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.2.** 04.06.2021 தேதியிட்ட பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.3.** தாவாப்படி தீர்ப்பாகவேண்டும்.

( வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் குறியீடு செய்யத்தக்கதல்ல என்று அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால்

ஆட்சேபணை செய்யப்பட்டு அந்த ஆட்சேபணைக்குட்பட்டு வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது)

**குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH